OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
2 SEP 1910
MADRAS.

✠

கடவுள் துணை

திருமந்திரநகர்

திவ்வியபனிமய நாயகிபேரில்

# பனிமயவெண்பா.

இஃது

தூத்துக்குடி

எம். ஏ. பீரீஸ் அவர்களால்

இயற்றியுள்ளது.

---

தூத்துக்குடி

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

8—10.

6, I MBS, P
MIO.
56103

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
2 SEP 1910
MADRAS.

✠

கடவுள் துணை.

திருமந்திரநகர்
திவ்வியபனிமய நாயகிபேரில்

# பனிமயவெண்பா.

இஃது
தூத்துக்குடி
எம். ஏ. பிரீஸ் அவர்களால்
இயற்றியுள்ளது.

---

தூத்துக்குடி
சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

5—8—10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2 SEP 1910 MADRAS.

# பனிமய வெண்பா.

## காப்பு.

(வே
பொன்னாட் டிறைவிதனைப் போற்றி யருள்பெற
பன்னாட் டுணிந்த பயனாக — இந்நாட் (டாள்
பனிமயவெண் பாவுரைக்கப் பண்பொடவ டண்
நணிமயத்தை நல்காதோ ளா.

## நூல்.

எல்லை யுடுத்தவளே இம்பர்க் குறுகவலை
தொல்லை யழித்தருளைத் துய்க்கின்ற- எல்லை
கடிந்த கருணையளே காப்பதுன் பாரம்
வடிவே பனிமய அம் மா. [1]

சீத மதிமிதித்த சிங்காரி அன்னதிருப்
பாத தொழும்புறநான் பற்றாதோ- போதந்
தருவாய் அடியனுக்குன் தஞ்சமன்றி இல்லை
வருவாய் பனிமய அம் மா. [2]

ஆரணம் ஓதியரும் அன்றன்னை மக்களுட்சம்
பூரணம் என்றதுவும் பொய்யல்வே- வாரணம்
நேரார் திருமகளே நிர்க்கதியேன் துன்பமற
வாராய் புனிமயஅம் மா. [3]

வஞ்சம் படைத்தவரும் வையம் பகைத்தவரும்
நெஞ்சங் துணிந்துவரு நின்றனர்கொல்— கஞ்சம்
அனைய முகவழகி ஆதரிப்பாய் வேத
மனையாம் பனிமயஅம் மா. [4]

பொன்னை அணிந்தென்ன பூவை அணிந்தென்ன
மின்னை அணிந்தென்ன மேதினியில்- நின்னை
அணியா ரருநரகில் ஆழ்வர் எனையாண்
மணியே பனிமயஅம் மா. [5]

ஆரா வமுதே அரும்பா விரைமலரே
தீராப் பிணிதீர் திருமருந்தே- பாராய்
அடியன் துயரகற்றல் ஆகாதோ ஞான
வடிவே பனிமயஅம் மா. [6]

அற்றார் பெருமை அளவிடினும் அன்னையிலும்
உற்றாள் பெருமை உணர்வரிதே- பொற்றாள்
அடைந்தார்க் கருண்மழையே ஆண்டருள் வை
மடையே பனிமய அம் மா. [7] (தேனார்

அறமொன்று மில்லேன் அருளொன்று மில்லேன்
புறமொன்று மென்னைப் புரந்தாள் - திறமொன்று
வானே வகுத்தவனை மண்ணில் வகுத்தவெழின்
மானே பனிமய அம் மா. [8]

தாயின் கரம்விட்டுத் தத்தளிக்குஞ் சேய்போலப்
பேயின் வசப்பட்டுப் பேதுறுங்கால்- ஆயின்
அருளும் அகன்றனவே அந்தந்தோ ஈதென்
வருமம் பனிமய அம் மா. [9]

மாய உலகவெகு மானம் மதித்துகொடுந்
தீய செயலனைத்துஞ் செய்தலுற்றேன்– தூய
அரியே உடுத்தவளென் அல்லல் தொலைத்தருள்
மரியே பனிமயஅம் மா. [10](வை

காட்டின் மறைந்துயிரைக் கவ்வும் புலியொருவர்
வீட்டின் மறைப்பரோ வெய்யவெறி-யாட்டில்
எரிவாய்க் கிலக்கானேன் இப்பொழுதே காவாய்
மரியே பனிமய அம் மா. [11]

ஓட்டைக் கடத்துளே ஊற்றிய நீரென்ன
கேட்ட நெறி முறையுங் கீழ்நோக்கத்- தேட்டைப்
பரிவாய்ப் பெருக்கியுழல் பாவியெனை யாள்வை
மரியே பனிமய அம மா. [12]

ஜென்ம வினையணுகாத் தெய்விக நித்திலமே
கன்ம வினைவசத்திற் கட்டுண்டு- நன்மை
புரியா திருந்தவடிப் புன்மையறக் காவாய்
மரியே பனிமய அம் மா. [13]

செல்லச் சுரக்குமணற் கேணிநீர் நின்னுமஞ்
சொல்லச் சுரக்காதோ துய்யகுணம்- நல்ல
அரியே மழவெனைநீ ஆதரிக்க வேண்டும்
மரியே பனிமய அம் மா. [14]

தாவி தரண்மனையே சாலமோன் ஆலயமே
மூவ ரிருப்பிடமே முத்தொழிலார்- தேவைப்
பரிவா யளித்தவளே பாவியெனை ஆள்வாய்
மரியே பனிமய அம் மா. [15]

காற்றிற் சருகெனவே காட்டின் மழவெனவே
சேற்றிற் சினையெனவே தேம்புமெனை- போற்றற்
கரிய கரந்தந்து ஆளாதெ னன்பு
மரியே மனிமயஅம் மா. [16]

பார்க்கும் விழியென் பயன்படுமோ நள்ளிருளில்
ஆர்க்குங் கடல்போ லறிவெனினு- மார்க்கும்
பரிவா மலர்க்கழலுட் பற்றிலாரென் னுவர்
மரியே பனிமய அம் மா. [17]

OFFICE OF THE ... BOOKS
REGISTERED
2 SEP 1910
MADRAS.

புயங்க வடிவெடுத்த பொல்லாச் சிடுமதி
புயங்க டணித்தனையிப் பூவில்- நயங்க
டெரியே னுயவழி செப்புவாய் திவ்ய
மரியே பனிமயஅம் மா. [18]

கற்புயருங் கன்னி கதியமரர் சென்னிவள
ரற்புயரும் அன்னை அடியவற்காய்- வெற்புயரு
சேயாங் கடவுடனைத் தீவிரம்நீ வேண்டியருள்
வாயே பனிமய அம் மா. [19]

(வணங்கத்

கொண்டல் வணங்கக் கொடைவணங்கக் கோன்
தொண்டர் வணங்கச் சுரர்வணங்க - மிண்டர்
அனைவோர் வணங்கவர மார்ந்தவணீ யன்பு
வனைந்தாள் பனிமய அம் மா. [20]

உண்டு கிருபையென ஓர்நலனு மில்லாருங்
கண்டு களியார்த்தல் காரணமென்— உண்டு
உறைதூங் கிருண்மனதை உன்னொளியிற் சேரம்
மறையே பனிமய அம் மா. [21]

காயம் பலக்கக் கனயோகஞ் செய்வரெம
மாய னிடுவலை மாற்றறியார்— தூய
கதியாங் தவவழியைக் காட்டியெனை யீர்ள்வை
மதியே பனிமய அம் மா. [22]

நீரிற் குளித்தாலும் நீண்டவுடை போர்த்திலேகாய்
சீரிற் புசித்தாலுந் தீயமனம்— பாரில்
ஒழித்தார்க் குளதுபரம் உன்னுதவியொன்றே
வழித்தாம் பனிமய அம் மா. [23]

பன்னிரண்டு மீன்முடித்தபாவையளைக் கண்டுலகில்
என்னிரண்டுகண் குளிர்வதெக்காலம்-மன்னிரண்டு
கஞ்ச மலர்க்கழனற் காப்பிலெலே நீக்கியதென்
வஞ்சம் பனிமய அம் மா. [24]

வேனிகர்த்த கண்ணூர் விரகவலே யிற்பட்டு
நானிகர்த்த னஞ்சார் நரவிலங்காய்- பானிகர்த்த
செஞ்சொன் மொழியரசி சேயனெனே மீட்காதெ
வஞ்சம் பனிமய அம் மா. [25] (ன்

கண்ணூட்ட மாகும் கணக்கிலநற் சிந்தனையொன்
றுண்ணூட்ட மாகா உணாவென்னே— நண்ணூட்டு
ஊற்றே உனதருளே ஊட்டியரு ளம்பொனிரை
மாற்றே பனிமய அம் மா. [26]

பொல்லாப் பவக்கணங்கள் புந்தி நிலேமாற்றி
எல்லாக கடுவினேயு மென்றலேயிற்- கல்லா
யிருத்திக் குரங்கென்ன இம்சிக்கும் வேலே
வருந்தி பனிமயஅம் மா. [27]

தண்டாள மாலை தளிர்கரத்தி லேந்திமும்
மண்டலத்தை யாளு மகராசி-பண்டரவ
நஞ்சை யுதைத்தவளே நையுமெனைப் பாராதென்
வஞ்சம் பனிமயஅம் மா. [28]

தீயாரை நட்பாக்கிச் செய்தவினை ஒன்றலவே
பேயாரைப் பின்றொடர்ந்த பெற்றியிதே-தூயாரும்
நல்லா ருறவின்சொ னன்மைபல வெய்கவருள்
வல்லாய் பனிமயஅம் மா. [29]

கற்பகமே கண்மணியே கட்டமுதே கைப்பொரு
பொற்பகமேபூங்குயிலேபூமகளே-அற்புதமே(ளே
சேய னுனதரிய சேவடியை நாடாதென்
மாயம் பனிமயஅம் மா. [30]

முந்தை முடித்தபழி மோக்க வழியகற்ற
அந்த வினைபகல ஆண்டவனைத்- தந்த
அரிய இதயமின்று அப்புறத்த தென்ன
மரியே பனிமயஅம் மா. [31]

பூவிற் சிறந்தவளே பொன்னுலக ராக்கினியே
நாவிற் சிறந்தவளே நான்பாடு- பாவிற்
கிசையா யிருப்பவளே என்னழுங்கள் மாற்றல்
வசையோ பனிமயஅம் மா. [32]

திங்கள் சுடர்மீனுஞ் செய்தானைச் செய்யமல
ரங்கை தனிலேந்து மம்மவினிப்– பங்க
மொருவ வுனையன்றி உண்டுகொலீங் காள
வருக பனிமய அம் மா. [33]

கல்லா மெனதுள்ளங் கட்கினிய பைங்கொல்லைப்
புல்லா யருண்மலரப் பூப்பதென்றோ- வில்லார்
மதியே யரும்பதத்தை வாழ்த்தாத தென்ன
மதியோ பனிமயஅம் மா. [34]

(சேர்ந்தபணம்
சொந்தமென்றார் பந்துவென்றார் சூழ்ந்திருந்தார்
வந்தவழி மீளவனூர் மாறிவிட்டார்-மைந்தனெனைச்
சீரா ரிதயமொடு செல்வி புரந்தருள
வாராய் பனிமய அம் மா. [35]

ஆரணமே அற்றாரை ஆதரித்து வாழுயர்த்தும்
வாரணமே பேரின்ப மாதவமே- தாரணியில்
ஓரா தரவின்றி உள்ளுடைந்தே னுளவிவண்
வாராய் பனிமயஅம் மா. [36]

தறியேன்
நல்லாரைக் கண்டறியேன் நன்மையொன்று செய்
புல்லாரைநீத்தறியேன்புன்மையன்றோ-இல்லாரை
அஞ்ச லெனப்புரக்கும் அன்னநல னில்லாதென்
வஞ்சம் பனிமயஅம் மா. [37]

ஓயாத நல்குரவா லுள்ளுடைந்தார் பின்னரவர்
தேயாத செல்வமெனச் சிந்தைவிட்டார்- ஆயாத
பேதைக் குணமன்றோ பிள்ளையென நீயழைக்க
வாதேன் பனிமயஅம் மா. [38]

நீருயர்ந்த சைவலமும் நிற்குமோ நீரறகி (ர்ந்த
னேருயர்ந்த அன்பென்மாட் டில்லையெனில்-சிருய
பங்கை யடைவேனே பாமரனைக் காவெழிலார்
மங்காய் பனிமய அம் மா. [39]

(யென்பர்
வாதமென்பர் பித்தமென்பர் மற்றையநாள் ஜன்னி
ஏதமென்பர் இன்னுயிரும் ஏகியபின்- ஆதரவாய்
அந்தோ மகவென்பர் அப்புறமென் சொர்ப்பனமே
வந்தாள் பனிமய அம் மா. [40]

தூரத் தொளிர்மீனைத் துய்யமுடி யாயளக
பாரத் தமைத்ததிருப் பைங்கிளியே- ஈர
மிலையோ எளியன்மீ தின்னமுதம் பொங்கும்
மலையே பனிமயஅம் மா. [41]

சீதளமே சித்திரமே திக்கற்றார் கைக்கினிய
சாதனமே ஏழையெனைத் தாவிவரு- பாதகமே
மாயத் துணைபுரிவாய் மன்றாட்டைக் கேட்டிரங்கு
வாயே பனிமயஅம் மா. [42]

சொல்லிற் கடந்தவளே தொல்லை தடிந்தவளே
எல்லிற் சிறந்தவளே என்றுயே- நெல்லிற்
பதரா யிவணுழலப் பாரின் மனச்சம்
மதமோ பனிமய அம் மா. [43]

வண்டினங்கள் கூண்டு வழியு நறைமாந்தக் (யும்
கண்டனனிற் பாதமலர் காய்ந்துலரு- தொண்டனை
மஞ்சை இகல்கருணை வார்கரத்தா லேவாதென்
வஞ்சம் பனிமய அம் மா. [44]

காடாம் புழுக்களடை காக்குங் கடத்தைமன
நாடா திருக்கவரு ளல்காயோ- வாடா
நறைபா யரும்பூவே நானிலமும் வாழ்த்தும்
மறையே பனிமய அம் மா. [45]

நட்ட பயிரிலொரு நற்பயனைக் காணுதார்
கட்டி முறுவதூஉங் காட்சியன்றோ- திட்ட
படிறனுனையகலப் பார்த்திருப்ப தென்றன்
மடியே பனிமய அம் மா. [46]

பாலப் பிறைகாலும் பாதமதி லோராவம்
வாலைச் சுளித்தயரும் வாறென்னை— சாலப்
புரிதொற் பிழியன்றோ போந்தநன் றீதே
மரியே பனிமய அம் மா. [47]

நாறும் மலக்குரம்பை நல்லபனி நீரானு
டோறும் மினுக்கியென துட்டனரி- பாறும்
விருந்தா யருந்தவன்றோ மீண்டருள்வை ஞான
மருந்தே பனிமயஅம் மா. [48]

பேயன்றி நின்மகிமை பேசாதா ரிங்கெவரோ
தாயன்றி மக்களுக்கார் தஞ்சமுண்டு- சேயன்றி
ஈன்றாள் விழைவதெவன் இன்பம் பயக்குமிரு
வான்றாழ் பனிமயஅம் மா. [49]
(பேன்

மீனக்கொடி யென்பேன் வேந்தர் வழித்தென்
ஆன வொழுக்க மணுவறியேன்- ஈன
வழக்கைத் தொலைத்துன்னை வந்திக்கப் பெய்தாண்
மழைக்கைப் பனிமயஅம் மா. [50]

மாறாக் கருணையுள மாமதுர வாரியிவண்
ஆறாப் பெருந்துயரால் அல்லலுற- வேறா
யிருந்தான் முறையாமோ ஏழையெனை நோக்க
வருந்தேன் பனிமய அம் மா. [51]

குன்றா நறைகமழுங் கோக்கொடியே கோகிலமே
நின்றா ணினைவார்க்கு நீடுணையே- மன்றா
டரிய திருமகவை அன்னைதசு நேவிஸ்
மரியே பனிமயஅம் மா. [52]

கலக விழிமடவார் கட்டழகில் வீழ்ந்து
விலக வழிகாணு விம்முகின்றேன்— அலகைத்
தலையைப் பொடித்தகழல் தாராயோ வேத
மலையே பனிமய அம் மா. [53]

[ருக்கத்
வீங்கிருளை யோட்டுசுடர் வெய்யோனை வேய்ந்தி
தேங்கமலச் செவ்வாய் திறவாதோ- ஓங்கமலத்
தாயே யகம்புகுந்த சஞ்சலத்தை நீக்கியருள்
வாயே பனிமய அம் மா. [54]

தேவன் குடியிருக்கச் செய்த திருவீட்டிற்
பாவம் பழிகொலையும் பாதகமும்- மேவல்
சரியோ முறையாமோ சற்குணமே தந்தாள்
மரியே பனிமயஅம் மா. [55]

மாடப் புறுவே மடக்கிளியே மாமயிலே
தேடக் கிடையாத் திருப்பொருளே- மூட
மதியே னெகிழ்ந்தகலம் வந்துலவ ஆசீர்
வதியே பனிமய அம் மா. [56]

மந்திர வூர தனை மாறாக் கருணையொடு
சந்ததமு மாளுந் தயாமுகிலே- இந்துலவு
பாதாம் புஜமெற்குப் பாத்தியதை இல்லையெனல்
வாதாம் பனிமய அம் மா. [57]

வாடா நறுமலரே வற்றாச் செழும்புனலே
கோடா வரத்தினளே குற்றமென்னை- நாடா
தொழியப் புரியுதவி உத்தமர்சூழ் மோட்ச
வழியே பனிமய அம் மா. [58]

ஆனாள் சுவக்கீன் அருமந்த புத்திரிநிற்
பானா னொழுகவாம் பாலிப்பாய்- கானா
ரரும்பும் புதுமலரே அற்புதமே வேத
வரம்பே பனிமய அம் மா. [59]

சுந்தரமே மோட்ச சுதந்தரமே மெஞ்ஞான
மந்திரமே இன்னம் மவுனமென- தந்திரமே (லன்
கொண்ட எரிவிடத்த .கோட்டை யுடைத்தபொ
வண்டே பனிமய அம் மா. [60]

தண்டா மரைப்பதத்தின் சாயை அரிதெனினும்
தொண்டா யினும்புரியச் சொல்லாயோ-விண்டாற்
புரியா திருப்பேனோ போற்றேனோ நின்னை
மரியே பனிமய அம் மா. [61]

ஆரம் புனைந்தாரும் அத்திபரி கொண்டாரும்
வீரம் புனைந்தாரும் வியந்தனரால்— சாரம்
பெருகுந் தவமகிமை பெற்றியறி விக்க
வருக பனிமய அம் மா. [62]

கோபம் விருதாகக் கோள்புறணி வாகனமாய்
பாபம் அணிதளமாய்ப் பற்றிமனத்- தாபம்
அறவே இழந்தவெனக் கன்புசெய்தா ளென்றும்
மறவேன் பனிமயஅம் மா. [63]

வேண்டும் அறநெறியை மேதினியிற் கைக்கொ(ண்டு)
யாண்டும் இடும்பைதரு யாழ்கடலைத்- தாண்டும்
நலத்தை விளக்காயோ நம்பினோர்க் காய
வலத்தாள் பனிமய அம் மா. [64]

முத்தெடுக்கும் மந்த்ரநகர் மூதமளி வந்தமர்ந்த
உத்தமியே ரத்நமே உன்னதமார்- சித்திரமே
நீயே மனமுவந்தெ னிடிடரை நீக்கியருள்
வாயே பனிமய அம் மா. [65]

ஊதுகின்ற வேயிசைகேட் டெப்பியழி மான்போல
ஓதுகின்ற கள்ளவுரை உண்மகிழ்ந்து- தீதகன்ற
சிந்தை தனைக்கெடுத்தேன் சித்த மிரங்கியு
வந்தாள் பனிமய அம் மா. [66]

மந்தை தனைவிட்ட மறிபோலும் ஆதரவில் (தோ)
தொந்தலறு போழ்துனது நோக்கிலதேல்- அந்தந்
எந்த வழிதுணையோ ஏது கெதியாவன்
வந்தாள் பனிமய அம் மா. [67]

56103

தந்த மதிகொடுனைத் தாழ்ந்துகவி பாடாமல்
கந்த மலர்க்குழலார் காமுறவே- அந்த
இசைக ணிதம்பாடி எய்த்ததென கர்ம
வசமோ பனிமய அம் மா. [68]

அல்லும் பகலுமுனை அண்டிவரு மெய்யடியார்
சொல்லுந் துதியுவந்து தொக்கவரம்- செல்லும்
இகல வருண்மணியே என்னையவ ணுளா
வகையென் பனிமய அம் மா. [69]

தண்ணிய தென்வரையில் தங்கி யிருந்தாலும்
புண்ணியம் வந்து புகுந்திடுமோ- பண்ணிய
தீமை யறமுயன்று செய்கை நலத்ததன்றோ
மாமை பனிமய அம் மா. [70]

காய்ந்தார் புரமைந்தைக் காய்ந்த கடவுளரை
வேய்ந்தாய் மகவென்ன மேதினியில்- ஆய்ந்தார்
அரியா ரடிவிட் டகல்வரோ சொல்வாய்
மரியே பனிமய அம் மா. [71]

நஞ்சகத்த நச்சரவால் நானிலத்தி லேவளர்ந்த
வஞ்சகத்தைத் தீர்க்க வடிவான- அஞ்சுகமே
நெஞ்ச முவந்திருதா ணீழ லளியாதென்
வஞ்சம் பனிமய அம் மா. [72]

O-/IMBS,P

மட்டற்ற செல்வமே மாசற்ற ஜென்மமே
முட்டற்ற மோட்ச முதுவழிநற்- கட்டற்ற
சேய னெனைச்சுகிர்த செந்நெறியிற் சேராதென்
மாயம் பனிமயஅம் மா. [73]

பொன்னை வகித்தாலும் பூவை வகித்தாலும்
என்னை வகித்தாலும் என்பெறுங்கொல்- அன்னைக்
கிருபா நதியெனக்குக் கிட்டிலதே வின்பம்
வருமோ பனிமய அம் மா. [74]

அன்பு பெருக அருள்பெருக ஆநந்த
இன்பம் பெருக இதம்பெருக- துன்ப
மொருவ வுதித்தசுத னொடெனை யாள
வருக பனிமய அம் மா. [75]

வித்தகர் வீதியே மெய்த்தவ சோதியே
உத்தமர் நீதியே உன்னையண்டி- நித்தமும்
வேண்டுச் சுகிர்தநெறி மேவ அருள்புரிவாய்
மாண்ட பனிமய அம் மா. [76]

ஆர்ந்த திருவபலே அங்கெழுந்த பொற்கதிரே
சார்ந்த குளிர்மழையே தாவிவரு- சோர்ந்த
துகளோன் மிடிமை துடைத்தருள்வை தேவ
மகளே பனிமய அம் மா. [77]

நீரற்ற பொய்கைதனி னிற்குமோ தாமரைநி
னூரற்ற போதிவணூர் நாடுவர்கொல்- சீரற்ற
பாவி யெனைமீட்கப் பாராயோ தண்ணலரார்
வாவி பனிமயஅம் மா. [78]

பிள்ளை யழக்கண்டு பேசா திருப்பனளோ
உள்ள மகிழ்ந்தமுதம் ஊட்டாளோ- விள்ளற்
கரிய உவகையொடு ஆரமுதந் தந்தாண்
மரியே பனிமயஅம் மா. [79]

சுத்த அறிவும் சுகுண நெறியுமருட்
பத்த ருறவும் பரிவொடுற- நித்தம்
சொரிவாய் தயாமுகிலைத் துய்யதசு நேவிஸ்
மரியே பனிமயஅம் மா. [80]

சுருதி படர்கொம்பே தோணரிய அன்பே
வருதி யெனவழைத்தால் மாசும்- பருதி
முனிம மெனமாறும் முந்துவினை தீர்த்த
வனிதாய் பனிமயஅம் மா. [81]

பொன்னை விரும்பிப் புகழை விரும்பிமிக
வென்னை விரும்பியனே வித்தனைநாள்- கொன்னே
கழித்தே னெளியனைக் கைவிடா தாளுந்
வழித்தே பனிமயஅம் மா. [82[

அம்மா வெனம்மாவென் றல்லும் பகலுநீ
சும்மா யிருப்பதென் சூட்சமமா- இம்மா
நிலத்தே உனையகலேன் நிச்சயந்தந் தாளுன்
வலத்தாள் பணிமய அம் மா. [83]

நேற்று நினைத்தே னினைத்தமக நன்மையெலாம்
ஆற்று நெறிபிசகி அத்தனையுங்- காற்றி
றரும்பாய்த் தொலைந்தனவே துன்னுகலைக்ஞான
வரம்பேபணிமய அம் மா. [84]

காயுங் குணத்தன் கசடன் கபடனழற்
றோயு மலகைவழித் தோழனிவன்- ஆயும்
அருளைப் பொழிந்தே அகற்றுவாய் வெய்ய
மருளைப் பணிமயஅம் மா. [85]

நீண்ட கடற்காணு நித்திலமே நித்திலத்துட்
பூண்ட செழுஞ்சுடரே பொக்கிஷமே- வேண்ட
உரிய மகவென்மீ துன்னிதயம் வேறோ
மரியே பணிமய அம் மா. [86]

எவையத மேதமற இவ்வுலகிலேயுதித்த
தேவனையும் எவல்கொள் சேயிழையே- மேவவுனை
நல்கு முழுமதியே நானிலமும் வாழ்த்தவருண்
மல்கும் பணிமய அம் மா. [87]

தக்கமரபென்பேன் தயாள குணமென்பேன்
மிக்கபுக ழோதி மிகுந்திருந்த- தொக்கால
மெல்லாங் கவர்ந்தகலும் ஈனமதி மாற்றியருள்
வல்லாய் பனிமய அம் மா. [88]

வர்ம மகத்தொளித்து வஞ்சனைகள் செய்வதுவே
கர்மமெனத் துணிந்தார் காசினியில்- தர்மம்
புரிந்தென் பலனெய்வர் போதுமவர் நட்பு
மரியே பனிமய அம் மா. [89]

தூய திருமேனி சுந்தரத்தைக் காண்பதெந்நாள்
சேய னருங்கலிகள் தீர்வதெந்நாள்- ஆய
தருண மிதுவெனில் தாவியுனைத் தேடி
வருவன் பனிமய அம் மா. [90]

வண்ண மரகதமே மாணிக்க மாமணியே
கண்ணைப் பறிக்குங் கவின்சுடரே- அண்ணா
லரிய கழனீழற் காளாக்கி வைப்பாய்
மரியே பனிமய அம் மா. [91]

சாத்திரத்தைக் கண்டென்ன தர்க்கமுறை விண்
(டென்ன
சூத்திரத்தைக் கொண்டென்ன சொல்லரிய -தோ
(த்திரத்தைக்
கல்லா ரருநரகிற் காய்வரலா லென்னவீசய
வல்லார் பனிமய அம் மா. [92]

சீறும் புலிபன்ன சேராரைச் சேர்ந்தின்று
காறும் சுகமென்ன கண்டனம்ம- தேறும் (றும்
மதியே அளித்தருள்வை மாதவத்தோர் போற்
மதியே பனிமய அம் மா. [93]

நீரைப் பிரிந்தகய னேர வருந்துபொழு
தாரை யழைப்பே னனையுனது- பேரை
உரிமை யொடுகூவி உன்னுதவி கேட்பேன்
மரியே பனிமய அம் மா. [94]

(ந்த
முக்குணத்தில் தாமதமே முற்றியருள் வீற்றிரு
(ணத்தை
பக்குவமா மான்மாவைப் புள்ளிகொண்ட- அக்கு
நீக்கிப் புரப்பவொரு நீதி மொழியிலையோ
வாக்கிற் பனிமய அம் மா. [95]

சென்றன நாளிலிவன் செய்தவினை தான்மறந்து
நின்றன நாளிலெனும் நேர்மைதரு- நன்றன
நானே முயலவிதி நல்காயோ வேதாந்த
வானே பனிமய அம் மா. [96]

மலையே மயலீர் மழுவே மதிக்குங்
கலையே கருணைக் கடலே- மலையே
னலியே ஒன்றிராய் கடவே னருள
மலியே பனிமய அம் மா. [97]

திடமே மறுவிற் செடமே தாள
வடமே வயமே வளமே- அடமே
புரியே னெறிவாய் புகுதேன் புரந்தாண்
மரியே பனிமயஅம் மா. [98]

சேரேன் கயவரைச் செல்லே னவர்வழி
பாரேன் தகிக்கும் பவமணுவும்- தேரேன்
தெரிவா யறிவாய் சிறியேற் கருள்வாய்
மரியே பனிமயஅம் மா. [99]

உள்ளக் கவலை ஒருவ வொருநூறு
வெள்ளைக் கவிகொடு வேண்டினனால்- விள்ளற்
கரிய உவகையொடு ஆதரிப்பாய் திவ்ய
மரியே பனிமயஅம் மா. [100]

(பனிமய வெண்பா)

முற்றிற்று.

இராகம் — ஆனந்தக் களிப்பு.

சுத்த அமுதமிவ்வமுதம் — அதி
சுந்தரமான சுகந்த அமுதம்

உண்ணத்தகுந்த அமுதம்— மதி
யூட்டத்தகுந்த உயர்ந்த அமுதம்
எண்ணத்தகுந்த அமுதம்— நாவிற்
கினிமைதரும் பரிசுத்த அமுதம் (சுத்த) 1.

உத்தமமான அமுதம்— என்றும்
ஒல்காக்குணந்தரு நல்ல அமுதம்
சூத்திரம் ஓட்டும் அமுதம்— பெருந்
தொள்ளைநோய் துன்பத்தைக் கொல்லுமமுதம் 2.

அற்றோரைக் காக்கும் அமுதம்— வரும்
அல்லல் மிடியறப் போக்கும் அமுதம்
செற்றோரை நீக்கும் அமுதம்— தின்னத்
தெவிட்டாத பேரின்பானந்த அமுதம் (சுத்த) 3.

காலனை யோட்டும் அமுதம்— கெட்ட
காம வெகுளியை மாட்டும் அமுதம்
சீலனை யூட்டும் அமுதம்— ஏக
திரீத்துவ மொன்றாய் இலங்கும் அமுதம் (சுத்த) 4.

கள்ளமில்லாத அமுதம்— உவர்
கைப்புப் புளிப்பணு வில்லா அமுதம்
உள்ளத்துறையும் அமுதம்— அருள்
ஊதச்சுரக்கும தெளிந்த அமுதம் (சுத்த) 5.

பக்குவமான அமுதம்— ஞான
பாரகர் வேதியர் பருகும் அமுதம்
திக்கெல்லாம் வாழ்த்தும் அமுதம்— மோட்ச
செல்வப் பெரும்பதி சேர்க்கும் அமுதம் (சுத்த) 6.

குருடர் செவிடர்க்கமுதம்— மூகை
கூனர் சப்பாணி முடவர்க்கமுதம்
தெருட்டரு திவ்ய அமுதம்— நன்கு
தித்திக்கும் வாய்மை சிறந்த அமுதம் (சுத்த) 7.

கற்பாந்த கால அமுதம்— மிகக்
கைகண்டநுபவமான அமுதம்
உற்பாத மோட்டும் அமுதம்— எந்த
உலகிலுங் காண்பீரோ இந்த அமுதம் (சுத்த) 8.

சாதக்மான அமுதம்— உடு
சந்திரர் சூரியர் மாந்தும் அமுதம்
மாதகவான அமுதம்— அற்ப
மாசிலா தேவ மகத்வ அமுதம் (சுத்த) 9.

பத்தியமில்லா அமுதம்— மனப்
பக்குவமில்லார்க்கு எட்டா அமுதம்
நித்தியமான அமுதம்— என்றும்
நேசிக்கும் நேயர்க்கு நேய அமுதம் (சுத்த) 10.

பேயை மிதித்த அமுதம்— பாழும்
பிரபஞ்ச ஆசையைப் போக்கும் அமுதம்
தீயை அவிக்கும் அமுதம்— தேவ
தேவனுமுண்ட சுயம்பாமமுதம் (சுத்த) 11.

தாகத்தை மாற்றும் அமுதம்— சோம்பல்
தரித்திரந் தலைநீட்டா தழிக்கும் அமுதம்
சோகத்தை மாற்றும் அமுதம்— குணம்
சொல்லவோ நாவில்லை வல்ல அமுதம் (சுத்த) 12.

கைப்பொருள் வேண்டா அமுதம்— ஒரு
காசுஞ்செலவில்லை காண்பீர் அமுதம்
மெய்ப்பொருள் வேண்டும் அமுதம்— விமல
வேதன் பணிந்து தொழுத அமுதம் (சுத்த) 13.

கண்ணுக்கினிய அமுதம்— மலை
காடு வனங்குகை காணு அமுதம்
தண்ணிய சோதியமுதம்— இதய
தகளி இதம்பெறப் பெருகும் அமுதம் (சுத்த) 14.

உந்நதமான அமுதம்— கடல்
ஓடித்திசையிலா வாடுநர்க்கமுதம்
நன்னயமான அமுதம்— அருள்
நன்குகிளைத்துத் தளிர்க்கும் அமுதம் (சுத்த) 15.

பொறுமை யளிக்கும் அமுதம்— கோள்
புறணி பொறாமை யழிக்கும் அமுதம்
சிறுமை தொலைக்கும் அமுதம்— நல்ல
சீருந்திருவுங் கொழிக்கும் அமுதம் (சுத்த) 16.

கல்வி யளிக்கும் அமுதம்— நன்கு
கற்றதை ஞாபகம் ஊட்டும் அமுதம்
வல்வினை வாட்டும் அமுதம்— சோர்வு
மயக்கம் மடியெல்லாம் ஓட்டும் அமுதம் (சுத்த) 17.

கருத்திற்கெட்டாத அமுதம்— மன்னு
கலைக்யான வாய்மை கடந்த அமுதம்
திருப்தி நிறைந்த அமுதம்— இந்த
ஜகமெலாங்கொண்டாடுங் திவ்ய அமுதம் () 18.

பூசிதமான அமுதம்— அதி
புத்தி சாதுர்யம் புகட்டும் அமுதம்
தேசிகர்க்கேய அமுதம்— அன்றித்
தேடாரைத் தேடித் திரியும் அமுதம் (சுத்த) 19.

ஆவிக்குகந்த அமுதம்— வெறி
ஆவேசந்தன்னை யடக்கும் அமுதம்
சேவைக் குகந்த அமுதம்— யாரும்
சிந்திக்க வந்து செழிக்கும் அமுதம். (சுத்த) 20.

இன்ன அமுதம் எவ்வமுதம்— என்பீர்
இயம்புவேன் மந்த்ராலூர் வந்த அமுதம்
பன்ன[illegible]ரும் அமுதம்— சென்று
[illegible]குவீர் பனிமய மென்னும் அமுதம். (சுத்த) 21.

---

முற்றிற்று.

5603

20 A
15-17